இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 30-06-2023

# கோவில் நீதியைக் காக்கும் தீர்ப்பு

“வருணாசிரமத்தை எல்லா இடங்களில் இருந்தும் விரட்டிவிடப் போராடுகிறோம். அது இறுதியில் கோவில் கருவறைக்குள் போய் ஒளிந்து கொள்கிறது” - என்று சொன்னார் தந்தை பெரியார்.

அங்கிருந்தும் வருணாசிரமத்தைத் துரத்தும் திட்டமே, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பது ஆகும். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்த இந்தச் சட்டத்தை ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெற்றி பெற வைத்து நடைமுறையில் செயல்படுத்திக் காட்டி இருக்கிறார். உரிய பயிற்சி முடித்தவர்கள் ஆலயங்களில் அர்ச்சகர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டு அவர்களது திருப்பணியைச் செய்து வருகிறார்கள்.

**இதற்கு எப்படியாவது தடை போட, கோவிலை வைத்துக் கொண்டு ஒரு கூட்டம் ஏதாவது வதந்திச் செய்திகளைப் பரப்பிக் கொண்டு வருகிறது. ஆகமப் பூச்சாண்டிகளைக் காட்டிக் கொண்டு வருகிறது. சமூகநீதியைச் சீர்குலைக்கும் இந்த முயற்சிகளை தமிழ்நாடு அரசும் சட்டரீதியாகத் தடுத்தும் வருகிறது. இந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ஆனந்த் வெங்கடேஷ் அளித்துள்ள தீர்ப்பு, கோவிலிலும் சமூகநீதியைக் காக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பாக அமைந்துள்ளது.**

சேலம் சுகவனேஸ்வரர் கோவிலில் காலியாக உள்ள அர்ச்சகர் மற்றும் ஸ்தானிகர் பணியிடங்களை நிரப்ப கோயில் செயல் அலுவலர் கடந்த 2018 ஆம் ஆண்டு அறிவிப்பாணை வெளியிட்டார். ஆனால் இந்த அறிவிப்பு ஆகம விதிகளைப் பூர்த்தி செய்யவில்லை எனக்கூறி அந்தக் கோயிலில் பரம்பரை அர்ச்சகராகப் பணியாற்றி வரும் முத்து சுப்ரமணிய குருக்கள் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக நடந்து வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வாதாடிய மூத்த வழக்கறிஞர் ஆர். சிங்காரவேலன், ‘ஆகம விதிகளைப் பின்பற்றும் கோவில்களில் ஆகம விதிகளின்படி அர்ச்சகர் நியமனம் நிச்சயம் நடைபெற வேண்டும் என ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. ஆகம விதிகளைக் கடைபிடிக்கும் கோயில்களை இனம் கண்டு, அறிக்கை சமர்ப்பிக்க ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. இந்தக் குழு இதுவரையிலும் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்பதால் இதுவரை அர்ச்சகர் நியமனங்களை தள்ளிப்போட வேண்டும். சேலம் சுகவனேஸ்வரர் கோவில் ஆகம விதிகளின்படி பாரம்பரியம், கோவில் மரபு மற்றும் வழக்கத்துக்கு உட்பட்டே அபிஷேகம் மற்றும் ஆராதனைகள் மேற்கொள்ள அர்ச்சகர்களை நியமிக்க முடியும்’ என வாதிட்டார்.

அறநிலையத்துறை சார்பில் வாதாடிய சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர்.ஆர்.அருண்நடராஜன், ‘ஆகமவிதிகளைப்பின்பற்றும்கோயில்களைக் கண்டறிய அமைக்கப்பட்டுள்ள குழுவின் செயல்பாடுகளுக்கு, உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளதால் அந்தக்குழு இன்னும் முழுவீச்சில் இயங்கவில்லை. எனவே ஆகம விதிகளைக் கடைபிடிக்கும் கோயில்களில் தலைமை அர்ச்சகர்கள் அளிக்கும் தகுதிச்சான்றின் அடிப்படையில் ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்ற தகுதியான நபர்களை அர்ச்சகர்களாக நியமிக்க அனுமதியளிக்க வேண்டும். கோயில்களில் அர்ச்சகர், ஸ்தானிகர் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பாணை வெளியிட தக்கார் என்ற முறையில் கோயில் செயல் அலுவலருக்கு முழு அதிகாரமும் உள்ளது. அதேபோல பரம்பரை, பரம்பரையாக அர்ச்சகர்களாகப் பணிபுரிந்து வருபவர்களை மட்டுமே நியமிக்க வேண்டும் என தமிழக அரசின் திருத்தப்பட்ட புதிய விதிகளில் கூறப்படவில்லை’ என வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் பிறப்பித்துள்ள தீர்ப்பு மிகமிக முக்கியமானதாகவும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகவும் அமைந்துள்ளது.

“ஆகம விதிகளைப் பின்பற்றும் கோவில்கள் எவை என்பதைக் கண்டறிய அமைக்கப்பட்டுள்ள குழு இன்னும் தனது பணிகளைத் தொடங்கவில்லை. அந்தக்குழு அறிக்கை சமர்ப்பிக்கும் வரை அர்ச்சகர்களை நியமிக்கக்கூடாது என உயர்நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்படவில்லை. பல கோயில்களில் அர்ச்சகர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் அந்தக் குழுவின் அறிக்கைக்காகக் காத்திருந்தால் அன்றாடம் நடைபெறவேண்டிய பூஜை, அபிஷேகம் போன்றவற்றை தடையின்றி மேற்கொள்வதில் சிக்கல் ஏற்படும். சேலம் சுகவனேஸ்வரர் கோயிலைப் பொறுத்தமட்டில் ‘காரணம் - ஆகமம்’ பின்பற்றப்படுவதாக சொத்துப்பதிவேட்டில் உள்ளதாக அரசுத் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. எனவே ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்ற தகுதியான நபர்களை, குறிப்பிட்ட ஆகம விதிகளைப் பின்பற்றும் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கலாம். அதற்கு எந்தவொரு ஜாதியும் தடையாக இருக்காது. அதாவது ஆகம விதிகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தகுதியான நபர்களை அர்ச்சகர்களாக நியமிக்கும்போது, பரம்பரை, பரம்பரையாக குறிப்பிட்ட ஜாதியினரை மட்டும்தான் அர்ச்சகர்களாக நியமிக்க முடியும் என உரிமை கோர முடியாது.

இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் சேலம் சுகவனேஸ்வரர் கோயிலில் புதிதாக அர்ச்சகர்களைத் தேர்வு செய்யும் வரை மனுதாரர் பணியில் தொடர அனுமதிக்க வேண்டும். பின்னர் நடத்தப்படும் தேர்வில் மனுதாரரையும் பங்கேற்க அனுமதித்து முடிவு எடுக்க வேண்டும்” என தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார் நீதியரசர் அவர்கள். அனைத்து வகுப்பினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதற்கான சட்ட அங்கீகாரமாக இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது.

அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் சாதி பேதம் மட்டுமல்ல, பால் பேதமும் இல்லை. பெண்களும் அர்ச்சகர் பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். அர்ச்சகர் பயிற்சி பெறும் மாணவி ஒருவர் இதுபற்றி பேட்டி அளித்துள்ளார். “அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தின் கீழ் பெண்களும் அர்ச்சகர் ஆகலாம் என்ற வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டோம். ஸ்லோகங்கள், சூத்திரங்கள், சமஸ்கிருதம் படிக்க முடியுமா என்று தெரியாமல் இருந்தோம். இப்போது அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியின் மூலம் கற்றுக்கொண்டோம். எல்லாத் துறைகளிலும் பெண்கள் இருக்கி றார்கள். தற்போது இந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியிலும் மூன்று பெண்கள் படித்து வருகிறோம். ஆண்களுக்கு இணையாக நாங்களும் எல்லா சூத்திரங்களும், ஸ்லோகங்களும், கற்று முடித்து விட்டோம். இன்னும் 15 நாட்களுக்குள் எங்கள் பயிற்சி நிறைவடைந்து விடும். இதன்பிறகு பயிற்சிக்குச் செல்ல உள்ளோம்” என்று சொல்லி இருக்கிறார் அவர்.

**கோவில்களிலும் சமூகநீதி தழைக்கட்டும்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.6.2023) சென்னை, பெரியார் திடலில் திராவிட இயக்க எழுத்தாளர் சூர்யா சேவியர் மகள் டாக்டர் சே.சுஜி – டாக்டர் சி.அஜித்குமார் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்தார். இத்திருமண விழாவில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிட இயக்க தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுபவீரபாண்டியன், திரைப்பட நடிகர் சத்யராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில்

# ரூ.68.83 கோடி செலவில் கட்டப்பட்ட கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூன் 30 -**

**வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில் ரூ.68.83 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.06.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில் 68 கோடியே 82 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், முதன்மைப் பதப்படுத்தும் மையங்கள், சேமிப்புக் கிடங்குகள், சேமிப்பு வசதியுடன் கூடிய துணை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கான கல்வி சார் கட்டடங்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார்.

வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, விவசாயப் பெருமக்களை அழைத்து, அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்து வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, உழவர்களின் நலனை பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றமும் செய்து, வேளாண் பெருமக்களின் வருவாயினை பன்மடங்காக உயர்த்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

வட்டார அளவிலான சேமிப்பு கிடங்குகளுடன் கூடிய ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களானது, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனை, வேளாண் பொறியியல் மற்றும் விதைச் சான்று ஆகிய அனைத்து துறை அலுவலகங்களையும் உள்ளடக்கிய பொதுவான மையமாக செயல்படுகிறது. இந்த மையங்கள் வாயிலாக தொழில்நுட்ப ஆலோசனைகள், இடுபொருள்கள் விநியோகம், ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் செயலாக்கம் ஆகிய அனைத்து செயல்பாடுகளும் ஒரே குடையின் கீழ் விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இதுவரை, 193 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

அதன் தொடர்ச்சியாக, திருப்பூர் மாவட்டம் தாராபுரம், தர்மபுரி மாவட்டம் அரூர் மற்றும் சிவகங்கை மாவட்டம் சிவகங்கை ஆகிய இடங்களில் 6 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நீர் மேலாண்மை பயிற்சிக்கூடம் மற்றும் அலுவலகக் கட்டடம்;

கடலூர் மாவட்டம், அண்ணாகிராமம் வட்டாரம், புதுப்பேட்டை மற்றும் திருமுட்டம் வட்டாரம், காவனூர் ஆகிய இடங்களில் 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்;

வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறை சார்பில், விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் மற்றும் பழங்களை தரம் பிரித்து, சேமித்து, பதப்படுத்தி வைத்து, நல்ல விலைக்கு விற்பனை செய்திட ஏதுவாக ஈரோடு மாவட்டம் ஆலுக்குளி, திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர், ஆரணி, செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் ஆகிய இடங்களில் 25 கோடியே 62 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதன்மைப் பதப்படுத்தும் மையங்கள்;

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விளைப்பொருட்களை சேமித்து வைத்திடவும், அவ்விளைப்பொருட்களுக்கு பொருளீட்டு கடன் பெறவும் ஏதுவாக ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் சேமிப்பு கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தமிழ்நாடு நீர்பாசன மேலாண்மை நவீனமயமாக்கும் திட்ட நிதியிலிருந்து கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு;

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதியிலிருந்து கள்ளக்குறிச்சி மாவட்டம் அரியூர், விழுப்புரம் மாவட்டம் சிறுவந்தாடு, தஞ்சாவூர் மாவட்டம் தென்னூர், திருவாரூர் மாவட்டம் பெருந்தரகுடி ஆகிய இடங்களில் 3 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சேமிப்பு வசதியுடன் கூடிய துணை ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்கள்;

நபார்டு - கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து

5 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் திருவாரூர் மாவட்டம் கோட்டூர் வட்டம், மேலநத்தம் கிராமத்தில் 1000 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு, நீடாமங்கலம் வட்டம், காளாஞ்சிமேடு கிராமத்தில் 2000 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு, வலங்கைமான் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் 500 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு;

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் திசு வளர்ப்பு ஆய்வுக்கூடம், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் உள்ள வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 4 கோடியே 21 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் உடற்பயிற்சி கல்விக்கான கட்டமைப்பு வசதிகள் 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் மாணவ, மாணவியர்களுக்கான கல்வி வசதி மையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், குமுளூரில் உள்ள வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 4 கோடியே 21 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் உடற்பயிற்சி கல்விக்கான கட்டமைப்பு வசதிகள், நீலகிரி மாவட்டம், ஊட்டியில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி மையம் மற்றும் விருந்தினர் மாளிகை;

என மொத்தம் 68 கோடியே 82 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறைச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத் துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால், வேளாண்மை ஆணையர் டாக்டர் எல். சுப்பிரமணியன், வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் இரா. பிருந்தாதேவி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - நல உதவிகள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார்! ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*தென்காசி, ஜூன் 29-*


*தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில்முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்மற்றும்நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு கரிவலம் வந்தநல்லூர் வடக்குவீதிஅண்ணாதிடலில் சங்கரன்கோவில்வடக்குஒன்றியசெயலாளர்மதிமாரிமுத்து தலைமையில் நடைபெற்றது.*

*நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ., தனுஷ்எம்.குமார் எம்.பி., தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, முன்னாள் எம்.எல்.ஏ முத்துச்செல்வி, மாவட்ட அவை தலைவர்பத்மநாதன், துணை செயலாளர்கள் புனிதா, ராஜதுரை, மனோகரன், பொருளாளர் சரவணன், பொதுக்குழு உறுப்பினர்தேவாஎன்றதேவதாஸ், ஒன்றிய செயலாளர் லாலா சங்கரபாண்டியன், கடற்கரை, நகர செயலாளர் பிரகாஷ், மகளிர் அணி அமைப்பாளர்சிவசங்கரிஉள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.*



தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் காவல் துறை படைத் தலைவர் முனைவர் சைலேந்திரபாபு, 30.6.2023 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறுவதையொட்டி நேற்று முன்தினம் (28.6.2023) அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் பிரிவு உபச்சார விழா அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா தலைமையில் நடைபெற்றது. சென்னை உயர்நீதி மன்ற அரசு கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் எம்.பாபு முத்துமீரான் வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவில் காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் சென்னைப் பெருநகர காவல் துறை ஆணையர் சங்கர் ஜிவால் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.



இரயில் ஓடுகிற தண்டவாளமும்கூட
இரண்டுதான்.
ஒரு தண்டவாளம்
சிறியதாகவும்,
மற்றொரு
தண்டவாளம்
பெரியதாகவும்
இருந்தால் இரயில் ஓடாது.
அதைப் போலத்தான்
மத்திய ஆட்சி என்பது
ஒரு தண்டவாளம் ஆகவும்,
மாநிலங்களின்
ஆட்சி என்பது
இன்னொரு
தண்டவாளமாகவும்
இருக்க வேண்டும்
என்கிறோம்.

**...மாநில சுயாட்சிக்**
**குரலோன் கலைஞர் ....**